நாடு சட்டமன்றப் பேரவை
உறுப்பினர்களுக்கு
அனுப்பப்பட்ட தேதி
24 மார் 1982

கோரிக்கை எடுத்துக்
கொள்ளும் நாள்
29 மார் 1982

மானியக் கோரிக்கை (எண். 43)

62

# பல்வகை

(கடல் கடந்த நாடுகளிலிருந்து வந்த இந்திய அகதிகளுக்கும் குடிபெயர்ந்தோர்களுக்கும் துயர் தணிப்பும் புது வாழ்வும்)

©
தமிழ்நாடு அரசு
1982

SCANNED

தமிழ்நாடு அரசினருக்காக தமிழ்நாடு எழுதுபொருள் அச்சுத் துறை இயக்குனரால் அச்சிடப்பட்டது.

முன்னதாகவே பார்வைக்கு சுற்றனுப்பப்படுகிறது.

சட்டமன்றப் பேரவையில் விவாதிக்கப்படுமுன் இதனை **எவ்விதத்திலும் வெளியிடக் கூடாது.**

## கொள்கை விளக்கக் குறிப்பு.

1982-83 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டம் கோரிக்கை எண். 43-பல்வகை—கடல் கடந்த நாடுகளிலிருந்து வந்த இந்திய அகதிகளுக்கும், குடிபெயர்ந்தோர்களுக்கும் துயர் தணிப்பும், புது வாழ்வும்.

பர்மா, ஸ்ரீலங்கா, வியட்நாம் ஆகிய மூன்று நாடுகளிலிருந்து இந்திய வம்சா வழியினர் இந்தியாவிற்கு திரும்பி வந்து கொண்டிருக்கின்றனர். இந்தியாவும் இலங்கையும் ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையிலிருந்து வருகின்றனர். பர்மா மற்றும் வியட்நாமிலிருந்து தொடர்ச்சியாக குடும்பங்கள் வருவதில்லை. குறைந்த அளவில் அவ்வப்போது வருகின்றனர். அவர்களுக்கு மறுவாழ்வு அளிப்பது தேசிய பொறுப்பாக இருப்பதால் கடன்கள் மான்யங்கள் என்ற முறையில் அதற்காகும் அனைத்துச் செலவுகளையும், மத்திய அரசு ஏற்றுக் கொள்கிறது. மத்திய அரசின் சார்பாக மாநில அரசு, அதனைச் செயல்படுத்தும் ஒரு அமைப்பாகவே உள்ளது. மறுவாழ்வுத்துறை இயக்குநர், இந்தியாவிற்கு திரும்புபவர்களை வரவேற்பதற்கான ஏற்பாடுகளைக் கவனிப்பதோடு, இந்தியாவிற்குத் திரும்புபவர்களுக்காகத் தயாரிக்கப்படும் திட்டங்களையும் செயல்படுத்தியும் வருகிறார். இப்பணிகளைக் கவனிக்க இயக்குநர் அலுவலகத்தில் 9 அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளும், 72 அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகளும் உள்ளனர். மாவட்டங்களில் மொத்தம் 31 அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளும், 231 அரசிதழ் பதிவு பெறாத அதிகாரிகளும் உள்ளனர்.

### பர்மாவிலிருந்து ~~இருந்து~~ இந்தியாவிற்கு திரும்புவோர்.

பர்மா தன் வணிகத்தை நாட்டுடமை ஆக்கியது. அயல் நாட்டினர்கள் மீது ஏனைய சில கட்டுப்பாடுகளை கொண்டு வந்தது. பர்மா அரசின் இத்தகைய கொள்கையினைத் தொடர்ந்து இந்திய மக்களின் வழி வந்தோர் அதிக அளவில் இந்தியாவிற்கு 1-6-1963 முதல் திரும்பி வந்தனர். 30-1-1982 வரை தமிழ், தெலுங்கு, பீகாரி மொழியினத்தவர்கள் சுமார் 2,07,693 பேர் கப்பல், விமானம் மூலமாக பர்மாவிலிருந்து இந்தியாவிற்கு வந்துள்ளனர். இவர்களுள் தமிழினத்தவர்களான 1,44,268 பேர்கள் தமிழ் நாட்டிற்கு வந்துள்ளனர். 43,360 குடும்பங்களுக்குத் தொடக்கப் புதுவாழ்வு உதவிகள் அளிக்கப்பட்டுள்ளன.

1974-க்கு பிறகு கப்பல் வழியாக இந்தியாவிற்கு அகதிகள் எவரும் வரவில்லை. 1974 ஆம் ஆண்டிற்குப்பிறகு 252 குடும்பங்களைச் சேர்ந்த 800 பேர் விமானம் மூலம் கல்கத்தா வழியாக வந்தனர்.

## ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்கு திரும்பியவர்கள்.

ஸ்ரீலங்காவில் வாழ்ந்து வந்த இந்திய மக்களின் வழி வந்தவர்களில் நாடற்றவர்களாக' என்று கூறப்படுகின்ற 9.75 இலட்சம் பேரின் எதிர்கால வாழ்விடம் பற்றிய பிரச்சனை குறித்து இந்தியப் பிரதமருக்கும் ஸ்ரீலங்காவின் பிரதமருக்கும் இடையே 1964 ஆம் ஆண்டு அக்டோபர் 30 ஆம் தேதி ஓர் ஒப்பந்தம் கையெழுத்தாயிற்று. அதன்படி, இந்திய அரசு, மேற்கூறிய மக்களில் 5.25 இலட்சம் பேரையும், அவர்களுக்குப் பிறக்கக் கூடிய குழந்தைகளையும் ஏற்றுக்கொண்டு, குடியுரிமை அளிக்க ஒத்துக்கொண்டது. ஸ்ரீலங்கா அரசு மேற்கூறிய மக்களில் 3 இலட்சம் பேரையும் அவர்களுக்குப் பிறக்கக்கூடிய குழந்தைகளையும் ஏற்றுக் கொண்டு குடியுரிமை வழங்க ஒத்துக்கொண்டது 1964 ஆம் ஆண்டில் ஏற்பட்ட இவ்வொப்பந்தம் சாஸ்திரி சிரிமாவோ ஒப்பந்தம் என்றழைக்கப்பட்டது. இவ்வொப்பந்தத்தின்படி, அன்று நாடற்றவர்களாய் எஞ்சியிருந்த 1.5 இலட்சம் பேர்களின் எதிர்கால வாழ்விடம் பின்னர் ஒரு நாளில் முடிவு செய்யப்பட வேண்டும் எனவும் வகை செய்யப்பட்டிருந்தது. 1974 ஆம் ஆண்டு ஜனவரி 27 ஆம் தேதி பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தியும், ஸ்ரீலங்காப் பிரதமர் திருமதி சிரிமாவோ பண்டாரநாயகாவும் எஞ்சியுள்ள நாடற்றவர்களுக்குக் குடியுரிமை வழங்குவது பற்றிய இரண்டாவது ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். அதன்படி, குடியுரிமை வழங்குவது பற்றி பின்னால் முடிவு செய்வதாக இருந்த 1.5 இலட்சம் பேர்களில் ஒரு பாதிப் பேருக்கு இந்தியாவும், மறுபாதிப் பேருக்கு ஸ்ரீலங்காவும் குடியுரிமை வழங்குவதென ஒப்புக்கொண்டு வகை செய்யப்பட்டது. அதாவது இந்தியா 75,000 பேருக்கும் ஸ்ரீலங்கா 75000, பேருக்கும் குடியுரிமை வழங்கும், என ஒப்புக் கொள்ளப்பட்டது. மேலும், 1964 ஆம் ஆண்டு ஒப்பந்தத்தில் ஆண்டுதோறும் 35,000 பேரை ஸ்ரீலங்காவிலிருந்து தாயகத்துக்கு (இந்தியாவுக்கு) திருப்பி அனுப்புவதென ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது. திருப்பியனுப்பப் படுபவர்களை விரைவாகத் திருப்பியனுப்பி வைக்கும் பொருட்டு அந்த எண்ணிக்கையை ஆண்டுதோறும் 10 சதவீதத்தில் படிப்படியாக உயர்த்துவதென்றும் இந்த ஒப்பந்தத்தில் ஒப்புக்

கொள்ளப்பட்டது. இரண்டாவது ஒப்பந்தத்தின்படி அவர்களைத் தாயகத்திற்குத் திருப்பியனுப்பும் பணி 1981-ல் முடிவுற வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 30-10-1981-ல் ஒப்பந்தக் காலம் முடிவுற்றது.

இவ்வாறாகக் கணக்கிடப்பட்டவர்கள் மொத்தம் ஆறு இலட்சம் பேர் (அதாவது இரண்டு ஒப்பந்தங்களிலும் கணக்கிடப்பட்டவர்கள்) ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவுக்குத் திருப்பியனுப்பப்படவுள்ளனர். ஆனால், இந்த ஆறு இலட்சம் பேரும், அவர்களுக்குப் பிறக்கக் கூடிய குழந்தைகளும், சேர்ந்த தொகையில், தாயகம் திரும்ப வகை செய்துள்ளதை கணக்கில் கொண்டு பார்த்தால், இறுதியாகத் தாயகம் திரும்பிவர இருப்பவர்கள் எண்ணிக்கை ஏறத்தாழ 7.5 இலட்சம் ஆக இருக்கலாம். 1982 ஆம் ஆண்டு ஜனவரி 30 ஆம் தேதி வரையில் 3,76,389 பேர்கள் அடங்கிய 93,542 குடும்பங்கள் இந்தியாவிற்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவிற்குத் திரும்புகின்றவர்கள் தங்களுக்குச் சொந்தமான உடைமைகள், சொந்த நகைகள் ஆகியவற்றை ரூ. 16,000/- வரைக்கும், வர்த்தக இருப்பினை ரூ. 16,000/- வரைக்கும் சுங்கவரிக் கட்டாமல் தங்களுடன் கொண்டு வர அனுமதிக்கப்படுகின்றனர். அவர்கள் இராமேஸ்வரத்திற்கு வந்து சேர்ந்தவுடன் முதலில் தேநீரும், பின்பு ஒரு வேளை சாப்பாடும், இலவசமாக வழங்கப்படுகின்றன. இராமேஸ்வரம் துறைமுகத்தில் மறுவாழ்வுத் துறைப் பணியாளர்கள் அவர்கள் குறித்த புள்ளி விவரக் கணக்குகளை எடுக்கின்றனர். சுங்கப் பரிசோதனை முடிந்த பின்னர் ரூ. 10,000/-க்குக் குறைவாகக் கொண்டு வந்திருந்த குடும்பங்கள் இடைத்தங்கல் முகாங்களுக்குச் செல்லலாம்; அங்கிருந்து அவர்கள் பல்வேறு திட்டங்களில் சேருவதற்கு அனுப்பிவைக்கப்படுவர். அல்லது கண்டி, உதவித் தூதரகத்தின் முதன்மைச் செயலாளர், அவர்களுடைய குடும்ப அட்டைகளில் பரிவுரை செய்துள்ளவாறு வணிகக்கடன்கள் அங்கு அவர்களுக்கு வழங்கப்படும். ரூ. 5,000-க்குக் குறைவாகக் கொண்டு வருகின்ற குடும்பங்களுக்கு, அவர்கள் இடைத்தங்கல் முகாமில் சேர்க்கப்பட்டதும் அதிகபட்சம் மூன்று மாத காலத்திற்கு குடும்பத்தின் அளவிற்கேற்ப மாதம் ஒன்றுக்கு ரூ. 35 முதல் ரூ. 115 வரை ரொக்கத் தொகை வழங்கப்படுகிறது. மேலும் குறைந்த விலையில், அதாவது ஒரு

கிலோ அரிசி 57 காசு வீதம் வரையறுக்கப்பட்ட அளவுக்கு அரிசி அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அங்கே அவர்களுக்கு இலவசமாக மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது. மத்திய அரசு இந்தியாவிற்குத் திரும்பியோருக்கு உதவியளிக்க வகுத்துள்ள திட்டம், விதிகளின் கீழ் தாயகம் திரும்புவோர்களில் ரூ. 10,000-க்குக் குறைவாகச் சொத்துக்களைக் கொண்டு வருகின்றவர்களுக்கு நிலையான புதுவாழ்வு உதவி அளிக்கப்பட வேண்டும். பொதுவாக தாயகம் திரும்பி வருவோர்களில் மூன்றில் இரண்டு பங்கு குடும்பத்தினர் அரசின் உதவியைப் பெறும் தகுதியுடையவராக உள்ளனர். 30-?-1982ஆம் நாள் வரை மொத்தம் 93,542 குடும்பங்கள் ஸ்ரீலங்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்துள்ளன. இவற்றுள் 73,599 குடும்பங்கள் தமிழ்நாடு மாநிலத்தில் மட்டும் குடியமர்த்தப்பட்டுள்ளன. 3,921 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் ஏனைய மாநிலங்களில், அதாவது, கேரளம், ஆந்திரப்பிரதேசம், கர்நாடகம், அந்தமான் நிகோபார் தீவுகள் ஆகியவற்றில் குடியமர்த்தப்பட்டு புதுவாழ்வு அளிக்கப் பட்டுள்ளனர்.

சுமார் 1,000 தாயகம் திரும்பியோர்க்கு வணிகக்கடனாக ரூ. 5,000-மும், வியாபாரத்திற்கு கட்டிடம் கட்ட ரூ. 1,000-மும் புனர்வாழ்வு திட்டத்தின் மூலம் வழங்கி, தேசீய நூற்பாலை நிறுவனத்தின் விற்பனையாளர்களாக அமர்த்தப்படும் ஒரு புதிய வேலைவாய்ப்புத் திட்டம் ஒப்புதல் அளிக்கப்பட்டு செயல்படுத்தப் படுகிறது. இதுவரை 109 நபர்கள் தேசீய நூற்பாலை நிறுவனத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக்க, தாயகம் திரும்புவோர் நடத்தும் தேசீய நூற்பாலை கடைகளில் விலை கட்டுப்பாட்டின் கீழ் வழங்கப்படும் துணிகளையும் விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்படும்.

மற்றும், சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ், புனர்வாழ்வு திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வணிகக்கடன் ரூ. 5,000 தேசீயமயமாக்கப்பட்ட வங்கி ஒன்றின் மூலமாக பெற்று பயனடையும் திட்டமொன்றும் 1979-80 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப் படுகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் கிருஷ்ணாபுரம் கிராமத்தில் பால்பண்ணை திட்டம் ஒன்று மேற்கொள்ளப் பட்டுள்ளது. திருச்சி மாவட்டம் நாவல்பட்டு கிராமத்திலும் பால்பண்ணைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இரு திட்டங்களிலும், இதுவரையில் மொத்தம் 41 குடும்பங்கள் அமர்த்தப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் புதுவாழ்வு அளிக்கும் பல்வேறு திட்டங்களின் கீழ் குடியமர்த்தப்பட்டுள்ள 73,599 குடும்பங்கள் பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:—

| திட்டங்கள். | | குடும்பங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| நீலகிரி தேயிலை மலைத் தோட்டம் | .. | 2,181 |
| கன்னியா குமரி இரப்பர் மலைத் தோட்டம் | .. | 250 |
| ஆனைமலை சின்கோனா மலைத் தோட்டம் | .. | 125 |
| அரசு பண்ணைக் கழகம் | .. | 791 |
| நிலக்குடியேற்றத் திட்டம் | .. | 2.161 |
| கூட்டுறவு நூற்பாலை | .. | 2,055 |
| வியாபாரக் கடன் | | 57,544 |
| ஏனைய உதவிகள் (வேலை வாய்ப்பு முதலியன). | | 4,923 |
| அகதிகள் வங்கித் திட்டம் | | 3,270 |
| விவசாய நிலம் வாங்கும் கடன் | | 149 |
| சுயவேலை வாய்ப்பு (தேசிய நூற்பாலை நிறுவனம் மற்றும் பால்பண்ணை) | | 150 |
| மொத்தம் | | 73,599 |

13423
600 008

பர்மாவிலிருந்தும், ஸ்ரீலங்காவிலிருந்தும் இந்தியாவிற்குத் திரும்புவோர்களுடன், வியட்நாமிலிருந்து இந்திய மக்களின் வழி வந்தவர்களும் அவர்களுடைய உறவினர்களுமான 2,055 பேர்கள் அடங்கிய 501 குடும்பங்கள் 1975 ஆம் ஆண்டிலிருந்து வந்துள்ளனர். இவற்றுள் 316 குடும்பங்கள் தமிழ்நாட்டில் குடியமர்த்தப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள குடும்பங்கள் ஏனைய மாநிலங்களில் பெரும்பாலும் மத்திய அரசு நேரடி ஆட்சிக்குட்பட்ட பாண்டிச்சேரியில் குடியமர்த்தப்பட்டுள்ளன. 1975 ஆம் ஆண்டு ஜூலை முதற்கொண்டு வியட்நாமிலிருந்து இந்தியாவிற்கு திரும்புகிறவர்கள் மட்டுமே பர்மா, ஸ்ரீலங்கா ஆகிய நாடுகளிலிருந்து இந்தியாவிற்கு திரும்புகிறவர்களுக்கு அளிக்கப்படுவது போன்ற வியாபார, வீட்டுவசதி ஆகியவற்றிற்கான நிவாரண உதவி கடன்கள் பெறத் தகுதியுடையவர்கள் ஆவர்.

## 1982–83 ஆம் ஆண்டுக்குப் புதிய திட்டங்கள்.

### கதர் மற்றும் கிராமத் தொழில் திட்டம்.

ஸ்ரீலங்காவிலிருந்து தாயகம் திரும்புவோருக்கு கதர் மற்றும் கிராமத் தொழில் திட்டங்களின் கீழ் வேலை வாய்ப்பு அளிக்க சாத்தியக் கூறுகள் கண்டறிய (மத்திய கதர் கமிஷன், தமிழக கதர் மற்றும் கிராமக் கைத்தொழில் வாரியம், காந்திகிராமம் டிரஸ்டு ஆகியவைகளின் ஆலோசனையுடன்) பரிசீலனை செய்யப்பட்டது. சுமார் 2,000 குடும்பங்கள் கதர் கமிஷன் திட்டங்களின் மூலமாக கீழ்க்கண்ட தொழில்களில் குடியமர்த்த திட்டம் தீட்டப் பட்டுள்ளது.

1. செக்கு எண்ணெய்.
2. வாசனை சோப்பு.
3. தீப்பெட்டித் தொழில்.
4. சாயம் போடுதல் மற்றும் அச்சு வேலை.
5. பாலிவஸ்த்ரா.

தாயகம் திரும்புவோருக்கான கூட்டுறவு வங்கி குடும்பம் ஒன்றுக்கு ரூ. 15,000 வீதம் 8% வட்டி வீதத்தில் கதர் மற்றும் கைத்தொழில் திட்டத்தின் கீழுள்ள தொழிற்கைத்திற்கு நிதி உதவி வழங்கும். கதர் மற்றும் கிராமத் தொழில் கமிஷன் இத்திட்டத்தை ஏற்று நடத்தும் தொழில்களுக்கு வட்டியில் 4 சதவீதம் உதவித் தொகை அளிக்க முன்வரும்.

### பாலியஸ்டர் கதர் ஆலைத் தொழில்கங்கள்

தாயகம் திரும்பியோரில் ஒரு குடும்பத்திற்கு 2 நபர்கள் வீதம் 240 குடும்பங்களிலுள்ள 480 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் எண்ணத்துடன் நான்கு பாலியஸ்டர் கதர் நூற்பாலை அலகுகள் தொடங்க திட்டம் வகுக்கப்பட்டுள்ள 78 குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆலைக்கும் ரூ. 5.71 இலட்சம் செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு பாலிவஸ்த்ரா அலகும் இரண்டு முறை வேலை மூலம் 120 பேருக்கு வேலை வாய்ப்பளிக்கும் திறன் கொண்டது. ஒரு குடும்பத்திற்கு இரண்டு நபர்கள் வீதம் 60 குடும்பங்களுக்கு ஒவ்வொரு அலகிலும் வேலை வாய்ப்பளிக்கலாம். தாயகம் திரும்பியோர் இத்திட்டத்தின் கீழ் வேலை பெறுவதற்கு முன்பு அவர்களுக்கு ஆறு மாதங்கள் பயிற்சி அளிக்கப்படும்.

## காந்தி கிராம நம்பகம் கீழ் இயங்கும் பாலியஸ்டர் கதர்

## ஆலைத்தொழில் திட்டம்.

தாயகம் திரும்புவோரில் ஒரு குடும்பத்திற்கு இரண்டு நபர்கள் வீதம் 75 குடும்பங்களை பாலியஸ்டர் கதர் தொழிலகத்தின் கீழ் வேலை வாய்ப்பளிக்க திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்தொழிற்கூடம் 5 நெசவு மற்றும் தறிகளையும் ஒரு பயிற்சி நிலையத்தையும் கொண்டுள்ளது. இத்திட்டம் நிறைவேற ரூ. 5.99 இலட்சம் மூலதனமாக தேவைப்படுகின்றது. இத்திட்டத்தின் கீழ் தேர்வு செய்யப்பட்டவர் ஒவ்வொருவருக்கும் ஆறு மாத காலம் பயிற்சி அளிக்கப்படும். பயிற்சிக் காலத்தில் அவர்களுக்கு உதவித்தொகை, குடும்ப பராமரிப்பு தொகை, தற்காலிக குடியிருப்பு மானியம் மற்றும் மலிவு விலையில் அரிசி வழங்கப்படும். இவர்களுக்கு பயிற்சி கொடுக்க நான்கு ஆசிரியர்களும் மற்றும் ஒரு கணக்கரும் ஆறு மாத காலத்திற்கு நியமிக்கப்படுவார்கள். இதற்காக செலவு ஆகும் ரூ. 10,800-க்கு மேற்படாத அளவில் மத்திய அரசு ஏற்றுக் கொள்ளும். மேலும் பயிற்சி காலத்தில் ஏற்படும் மூலப் பொருள்கள் சேதத்தினால் விளையும் இழப்பை ஈடு செய்ய ரூ. 21,000-மும் மத்திய அரசு ஏற்கும்.

## கனரக வண்டி இயந்திரக் கம்மியர், ஓட்டுநர் பயிற்சி நிலையம், கும்மிடிப்பூண்டி.

உத்திரப் பிரதேசத்தில் மானாவில் செயல்பட்டு வந்த கனரக வண்டிகள் மெகானிக், ஓட்டுநர் பயிற்சி நிலையம், கும்மிடிப்பூண்டி இடைத்தங்கல் முகாம் பகுதிக்கு 1978-ல் மாற்றப்பட்டது. இந்தியாவிற்குத் திரும்பியவர்களில் முதல் தொகுதிக்கு 1978 ஆம் ஆண்டு ஆகஸ்டிலிருந்து பயிற்சி வழங்கப்பட்டது. இந் நிலையம் இதற்கு முன்பு மத்திய அரசு மறுவாழ்வுத்துறையின் கீழ் இயங்கி வந்தது. தாயகம் திரும்பியோரில் 15 மாத காலத்தில் 250 நபர்களுக்காவது ஓட்டுநர் (கனரக வண்டியில்) பயிற்சி கொடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன் மாநில அரசுக்கு தற்போது மாற்றப்பட்டுள்ளது. 10-4-1980 முதல் இந்நிலையம் தமிழக சாலைப் போக்குவரத்துக் கழகத்தின் மேற்பார்வைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இலங்கையில், கண்டியிலுள்ள இந்திய உதவி ஹை கமிஷனிடம் விருப்பம் தெரிவித்துள்ளதைப் பொறுத்து இக்கழகத்தில் பயிற்சி அளிக்கப்படுகிறது. விருப்பமுள்ள, தகுதி வாய்ந்த குடும்பத் தலைவர் ஒவ்வொருவருக்கும்.

32 வாரங்களுக்கு கனரக வண்டி மெகானிக், ஓட்டுநர் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி முடிந்தவுடன் மாநில போக்குவரத்து கழகங்களில் வேலைக்கு அமர்த்தப்படுவர். சென்னையிலுள்ள தாயகம் திரும்புவோர் கூட்டுறவு நிதி மற்றும் அபிவிருத்தி வங்கி மேற்படி பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் போக்குவரத்து கழகங்களுக்கு நிதிவசதி தந்து உதவும். ஒவ்வொரு தாயகம் திரும்பிய குடும்பத்துக்கும் ரூ. 15,000 வீதம் நிதி கடனாகக் கொடுத்து உதவும். இந்த பயிற்சிக்குரிய 250 இடங்களை புதியதாக வரும் குடும்பத் தலைவர்களைக் கொண்டு பூர்த்தி செய்ய முடியாத பட்சத்தில், ஏதேனும் இடங்கள் காலியானால் ஏற்கனவே தாயகம் திரும்பியோரின் குடும்பங்களில் உள்ள அங்கத்தினர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சியளிக்கப் படும்.

## பயிற்சித் திட்டம்.

இது தவிர, சுய வேலை வாய்ப்புத் திட்டத்தை விரிவுபடுத்தும் எண்ணத்துடன் ஏற்கனவே மறுவாழ்வுத் திட்டத்தின் கீழ் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களின் சார் நபர்களுக்கு பல்வேறு தொழில்களில் பயிற்சியளிக்கப்படுகிறது. இதற்காக மாநில தொழிற்பயிற்சி நிலையங்களில் ஆண்டு ஒன்றுக்கு மொத்த இடங்களில் 350 இடங்கள் இவர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளன. பயிற்சி பெறும் நபர் ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 82.50 வீதம் உதவித் தொகை அளிப்பதுடன், கட்டணம் செலுத்தாமல் விடுதியில் தங்க வசதியும் அளிக்கப்படுகிறது.

தாயகம் திரும்பிய இளைஞர்களுக்கு மீன் பிடித்தல் மற்றும் கொதிகலன் உதவியாளர்கள் சம்பந்தமான பயிற்சியும் அளிக்கப் படுகிறது.

இரா. நெடுஞ்செழியன்,
நிதி அமைச்சர்.

13424
சென்னை-600 008